நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள் என்று நினைக்கின்றேன். டீசலோடு எத்தனாலைக் கலப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதி இல்லை. பெட்ரோலோடு கலப்பதற்கு மட்டும்தான் மத்திய அரசினுடைய அனுமதி இருக்கின்றது. வெளிநாடுகளில் இதுபோல் இருக்கின்றது என்று சொன்னார். அங்கேயுள்ள பஸ்களில் அதற்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட எஞ்சின்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. அதற்கு முன்னோட்டமாக இப்பொழுது மஹாராஷ்டிரா அரசு ஒரு பஸ்சை ஸ்வீடனில் இருந்து இறக்குமதி செய்து, ஓராண்டு காலமாக அது பரீட்சார்த்த முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்குப் பின்னால்தான் மத்திய அரசு அனுமதி வழங்கும். பெட்ரோலோடு மட்டும்தான் எத்தனாலை கலக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது டீசல் விலை ரூ.42.93 ஆக இருக்கின்றது. எத்தனால் விலை ரூ.48.50 ஆக இருக்கின்ற காரணத்தினால் விலையும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அது நமக்கு சரியாக வராது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

கால்நடை கிளை நிலையம்

***61800—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், சுரக்காய்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்திலே சுரக்காய்பட்டியை மையமாகக் கொண்டு கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், சுரக்காய்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000—க்கும் குறைவாக உள்ளதால் அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுரக்காய்பட்டி கிராமம் விருதுநகர் மாவட்டத்திற்கும், மதுரை மாவட்டத்திற்கும் இடைப்பட்ட ஒரு மலைக் கிராமமாக விளங்குகின்றது. கொண்டையம்பட்டி, ஆயர்தர்மம், நல்லூர்பட்டி, மீனாட்சிபுரம் போன்ற கிராமங்கள் அந்த கிராமத்தைச் சுற்றி இருக்கின்றது. மலைப் பிரதேசமாகிய இந்தப் பகுதியில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்போருடைய எண்ணிக்கை அதிக அளவில் இருக்கின்றது. எனவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற கால்நடை வளர்ப்போருடைய நலன்களைக் கருத்தில் கொண்டு சுரக்காய்பட்டியை மையப்படுத்தி ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அங்கே கால்நடைகளின் அலகு மூன்றாயிரத்திற்கும் அதிகமாக இருக்கவேண்டும் என்ற அரசு விதி இருக்கிறது. இப்போது கால்நடைகளின் எண்ணிக்கை அங்கே சற்று குறைவாக இருக்கிறது. வருங்காலங்களில் அவற்றின் எண்ணிக்கை அதிகமாகும்போது, அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு மாதத்திற்கு முன்பு அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அப்போது அந்தப் பகுதியில் காணை நோய் தாக்கியபோது கொண்டையம்பட்டி, சுரக்காய்பட்டியை ஒட்டியுள்ள பகுதியில்தான் அதிகமான கால்நடைகளின் இறப்பு ஏற்பட்டது. அது ஒரு மலைப் பிரதேசம். கால்நடை கிளை நிலையம் தொடங்க கால்நடைகளினுடைய எண்ணிக்கை 3 ஆயிரமாவது இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிபந்தனையைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். நான் விசாரித்தவரையில் மூவாயிரத்திற்கும் கூடுதலாக அந்தப் பகுதியிலே கால்நடைகள் இருப்பதாகத் தெரிகிறது. மலைப்பிரதேசமாக இருக்கின்ற காரணத்தினால் அதற்கு முன்னுரிமை கொடுத்து மீண்டும் ஆய்வுசெய்து, சுரக்காய்ப்பட்டியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதி மலைப்பிரதேசமாக இருக்கின்ற காரணத்தினால் உறுப்பினருடைய கருத்துகளெல்லாம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

கணினி வடிவமைப்பு மையம்

***57073 திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் பட்டு நெசவில் புதுமையுடன் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த கணினி வடிவமைப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆரணி பகுதியில் செயல்படும் பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக மேற்கு ஆரணி வட்டார கைத்தறி குழுமம் (West Aarani Block Level Handloom Cluster) *ரூபாய் ஒரு கோடியே 47 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் புதிய வடிவமைப்புகள் உருவாக்குவதற்காக, ரூபாய் 15 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி தனியாக வடிவமைப்பு செய்யக்கூடிய ஒரு அமைப்பு அங்கே அமைப்பதற்கு அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*